திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அப்படியே ஈ அடிச்சான் காப்பியாக இருக்க வேண்டும் என்பதில்லை. யாரேனும் தவறு செய்திருந்தாலும்கூட, நாம் அதைத் திருத்தி நடைமுறையை மாற்றிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காமராசர் காலத்திலே போடப்பட்டு வந்த முறை என்று நான் சொன்னேன். யாராவது தவறு செய்திருந்தால் என்று நீங்கள் சொன்னால், காமராசர் தவறு செய்தார் என்று சொல்கிறீர்களா? இது விதிமுறைகளின்படி போடப்படுகிறது. என்ன என்ன விதிமுறைகள் என்று சொல்கிற ஒரு சிறு கையேடு. அதைப்போல ஆளுநர் உரை என்று போடுவதில் விதிகளில் என்ன முறை பின்பற்றப்பட்டு வந்ததோ அதுதான் பின்பற்றப்படுகிறது. ஆகவே உங்களுக்கு ஏதோ ஒரு மாயையில், எதையாவது பேசினால் என்ன கிடைக்கும் என்ற விதத்தில், 'யாராவது தவறு செய்தால்' என்று ஆரம்பித்து விட்டீர்கள் கடைசியில். உட்காருங்கள். காமராசரை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-2-1996) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

1. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் பட்டியல் III-ல் திருத்தம் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 25-7-1995-ஆம் நாளிட்ட 712 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

2. துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்திற்குச் சொந்தமான இயக்கூர்தி எண் TN. 45/Y-5192-க்கு மோட்டார் வாகன வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறையின் 20-9-1995-ஆம் நாளிட்ட 1409 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழநாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

3. சென்னை, திருவாளர்கள் ப்ளு கிராஸ் ஆப் இந்தியா, சென்னை-15 எக்ஸ் மொபைல்ஸிடமிருந்து வாங்கப் பெற்ற சுவராஜ் மஸ்தா கால்நடை ஆம்புலன்ஸ் மாடல் WT-48E-க்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12-10-1995 ஆம் நாளிட்ட 327 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

4. திருவாளர்கள் பாபநாசம் பேப்பர் மில்ஸ் லிமிடெட்டிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரியினை 1989-90-லிருந்து 1993-94 வரை சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளிப் போடுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11-8-1995-ஆம் நாளிட்ட 257 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

5. 1986-87 முதல் 1990-91 வரை இண்டஸ்டிரியல் வால்வ் விற்பனையினால் செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29-9-1995 ஆம் நாளிட்ட 443 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

6. 1-4-1982 முதல் 31-7-1987 வரையிலான காலங்களுக்கு சாம்பிராணி (BENZOIN) விற்பனையினால் செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையில் 3-11-1995 ஆம் நாளிட்ட 350 ஆம்

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவுகளின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

7. சென்னை (வடக்கு மற்றும் தெற்கு) வேலூர், திருச்சி, சேலம் ஆகிய கோட்டங்களில் 1985-86 மற்றும் 1986-87 ஆகிய காலங்களில் வெள்ளைப் பூண்டு விற்பனையினால் செலுத்தப்பட வேண்டிய வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி, கூடுதல் வரி, மற்றும் தண்டத் தீர்வை ஆகியவைகளை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10-10-1995-ஆம் நாளிட்ட 455 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

8. கன்னியாகுமரி மாவட்டம், மூலச்சல், திருவாளர்கள் YMCA மகளிர் மறுசீரமைப்பு மையம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 14-11-1995 ஆம் நாளிட்ட 359 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

9. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 35-வது பிரிவின் கீழ் கடமையாற்ற இணை ஆணையர்கள் வணிகவரி அவர்களுக்கு உள்ளூர் எல்லையை நிர்ணயம் செய்ய சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் வணிகவரிகள் அவர்களுக்கு அதிகாரம் வழங்குவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-11-1955 ஆம் நாளிட்ட 360 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959-ஆம் ஆண்டு தமிழ்நரடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

10. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்டப் பிரிவுகளில்

குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்தவும் அவற்றை நிறைவேற்றவும் உரிய அதிகாரங்களை வழங்குதல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 18-9-1995 ஆம் நாளிட்ட 303 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

11. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-9-1994 ஆம் நாளிட்ட 152 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

12. புதுக்கோட்டை, திருவாளர்கள் நிஜாம் பேப்பர் மற்றும் போர்டு மில்ஸ் லிமிடெட்டிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வரியினை 1-4-1990-லிருந்து 31-3-1993 வரை சில நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப் போடுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21-7-1995 ஆம் நாளிட்ட 232 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ பேரவைமுன் வைக்கப்பெற்றது).

13. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

14. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

15. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

16. 1994–95–ஆம் ஆண்டிற்கான அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் எட்டாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

17. 1994–95–ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் இணைப்பு '2' ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்களின் பட்டியலிலிருந்து தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தினை நீக்குவது குறித்து 29–12–1995–ஆம் நாளிட்ட கடித எண் 24401/89–21 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (சமுவ–3)–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

3. 1996–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14–ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

4. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் (பட்டியல் 1 முதல் 3 வரை) ஒவ்வொரு பட்டியலும் (வரிசை எண். 1 முதல் 100 வரை)

5. உடுக்குறியிடாத வினாக்கள் – விடைகள் (4–வது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).